அக்காக்களே நாம் காணும் சொந்தங்களே 2
நாங்கள் தானே இந்த மண்ணை வாழப்போகிறோம் 2 இனி
நாங்கள் தானே இந்த மண்ணை ஆழப்போகிறோம்

பிறந்த மண்ணை மீட்க மனம்  துணிந்து வந்தே நீங்கள்
பிறந்த வீட்டு உறவையெல்லாம் துறந்து வந்தீரே 2
சுரந்து வரும் அன்பை அள்ளி கூட்ட வந்தீர் 2
எம்மை சூழ்ந்து கொண்டு புதிய வழி காட்ட வந்தீரே

அக்காக்களே நாம் காணும் சொந்தங்களே 2

சாதி என்றும் பேதம் என்றும் எம்முள் இல்லையே
பல சாமி என்றும் வேதம் என்றும் ஏதும் இல்லையே 2
ஓதுவதும் மொழுகுவதும் நீதிதானக்கா 2
உங்கள் ஒளுக்க நெறி வாழ்வு ஒன்றே போதுமேயக்கா

அக்காக்களே நாம் காணும் சொந்தங்களே 2

ஒரு வயிற்றில் பிறந்த உணர்வில் இணைந்து நிற்கின்றோம்
நாம் ஒன்று என்ற பாசத்தினால் பிணைந்து நிற்கின்றோம் 2
வெறு மரத்தில் குடி புகுந்த பறவை கூட்டம் நாம் 2
ஈழ பெண் குலத்தின் கருமை நீக்கம் புதிய வர்க்கம் நாம்

அக்காக்களே நாம் காணும் சொந்தங்களே 2
நாங்கள் தானே இந்த மண்ணை வாழப்போகிறோம் 2 இனி
நாங்கள் தானே இந்த மண்ணை ஆழப்போகிறோம்